கடவுள் துணை.

# மதுரைத் தமிழ்ச் சங்கத்துப்

# புலவராற்றுப்படை

## மூலமும் உரையும்.

நாகூர்—'தர்கா' வித்துவானும்,

மதுரைத் தமிழ்ச்சங்கப் புலவருள் ஒருவருமாகிய

**குலாம்காதிறு நாவலர்**

இயற்றியவை.

RAMNAD

ACL-FTS
00418

இவை

மதுரைத் தமிழ்ச் சங்கத்தாரால்

அரங்கேற்று

மதுரைத்

தமிழ்ச்சங்க முத்திராசாலையிற்

பதிப்பிக்கப்பட்டன.

1903.

[இதன் விலை அணா 4]

# சிறப்புப்பாயிரம்.

புரசை—அஷ்டாவதானம்
சபாபதிமுதலியார் அவர்கள்
மாணாக்கரும்,
மதுரைத்தமிழ்ச்சங்கப்புலவருள் ஒருவருமாகிய
வித்வான்
திருமயிலை—சண்முகம்பிள்ளையவர்கள்
பாடியது.

## நாலடித்தரவு கொச்சகக்கலிப்பா.

க. கான்மணக்குங் குழலிமயக் கன்னியருத் தியஞானப்
பான்மணக்கும் பவளவாய்ப் பனவர்பிரான் றரும்பதிகந்
தான்மணக்கும் வையையெனுந் தண்ணதியி னெம்மருங்குந்
தேன்மணக்கும் பொழின்மணக்குந் தென்பாண்டித் திருநாடு.

உ. இன்னநாட் டினின்மனுவி னெழுத்தஞ்சுங் கலைதம்மின்
மன்னுசிவா கமமுமா மறைகளிற்சா மமும்போன்றிங்
கென்னையா ளுடையபிரா னெவ்வெட்டா டலைக்குயிற்றுந்
தன்னமிலாச் சிறப்பிற்றாந் தமிழ்க்கூடல் சிறந்தோங்கும்.

௩. இப்பதியி னிமயவரை யிடத்தன்று கயற்கொடியை
யெப்புவனத் துள்ளாரு மிறும்பூதெய் துறப்பொறித்த
வொப்பருஞ்சீர்க் கவுரியர்தா மொருமும்மைத் தமிழ்ச்சங்க
மெய்ப்புலவர் தமைமேனா ளோம்பியவா விழைந்தம்மா.

ச புயல்காட்டுங் குழல்வானம் புலிகாட்டு முகமொருசெங்
கயல்காட்டும் விழியமுத கடங்காட்டு முலைமாணர்
மயல்காட்டு மெருங்கிவான் பயிர்க்களையைக் களைகுநர்தஞ்
செயல்காட்டு மாறின்றித் திசைக்குமுக வைப்பதியில்.

௫ செந்தமிழின் சுவைகண்டு தேர்ந்துபல நூல்களையுஞ்
சந்தமுற வெழுதாத வெழுத்திலிட்டுந் தாரணியோர்
சிந்தைமகி ழச்செய்துந் திகாந்தமுந்தன் புகழ்நிறுத்தி
வந்தபுல வருக்கரும்பொன் மாரிவழங் கியும்பின்னும்.

௬. வேண்டியன வன்னவர்க்கு வேண்டியாங் குதவியும்பின்
காண்டலெளி தறநீதி கருத்துறநா டித்தரைமே
னீண்டபுகழ் வளர்க்குமிரு நிதிக்கரசாஞ் சேதுபதிக்
கீண்டுமுன்னே யவதரித்த வெழிற்பொன்னுச் சாமிமால்.

௭. தன்னினுந்தன் மகவொருங்கு தரணிதனி லறிவுடைமை
மன்னுயிருக் கினிதென்னு மறைமொழிக்கே யிலக்கியமா
வின்னபடி யொருமகவை யீதியெனப் பொதுநடஞ்செய்
முன்னவனை யேநாடி முன்செய்த தவப்பேற்றால்.

௮ பவஞான மாம்பசுபா சந்தெறுக்கும் பதிஞானஞ்
சிவஞான மெனத்தெரிக்குஞ் சிவஞான போதநன்னூற்
கவஞானந் தனையோட்டு மரியவுரை செய்தருளுஞ்
சிவஞான மாதவன்றன் றிருவருளாற் புவிமீது.

௯. நரையானூ ரிறையோனு நகமீன்ற வொருமானும்
புரைதீரத் தமிழ்நாடு புரப்பவொரு தனிப்புதல்வ
னொருவாத புகழுக்கிர பாண்டியனை யுதவுதல்போற்
றுரைசாமி யாம்பாண்டித் துரைசாமி தோன்றினனால்.

௧௦. தென்மொழியும் வடமொழியுஞ் செப்புமாங் கிலமொழியு
நன்மரபி னோர்ந்துதமிழ் நாலேதனை முகந்துண்டு
மின்மலிசெஞ் சடைவாணன் வியன்கழலே தஞ்சனக்கொண்
டன்மலிவெம் பிறப்பகலற் காம்விரகீ தெனக்கண்டு.

௧௧. சிவநேய மடைந்தொருங்கு சிவஞான போதமுன்னாந்
தவநீடு சித்தாந்த சாத்திரங்க ணனியோர்ந்து
பவமாற்றுஞ் சிவதீக்கை பரம்பரையா சிரியருழை
யவமோவச் செயப்பெற்றங் கடைவினமர்ந் தனனம்மா.

௧௨. இனையனருந் தமிழ்க்கல்வி யிற்றைஞான் றினிலோம்பு
மனநலத்துக் கவுரியர்தா மரபினில ராகவருந்
தனமீட்டித் தக்காரைத் தாம்வருவித் தருஞ்சங்க
மினிதாகத் தாபித்தற் கெண்ணியிது செயப்புக்கான்.

௧௩. ஓதிமத்தி னுருவாக வோங்கலரோன் காணாத
சோதிமுடிப் பெருமானுந் தொடுகடன்மா ஞாலமுற்று
நீதியிற்ற னடியரா நிலவிடமற் றவனொருத்தி
யாதரவிற் றரும்பிட்டிற் கடிமையா மூதூரில்.

௧௪. மறைபொருநான் கெனயாரும் வழுத்துவதற் கிலக்காகத்
தறைவயினுங் கிலந்தமிழொ டாரியம்வல் லுநர்தம்மை
யறைகூவி யழைத்தவனை யங்கமெனத் தகநிறுவிப்
பிறைமுடித்த விறைபோலப் பெருந்தகைதா னுடனிருந்தான்

௧௫. இன்னதிது வாகவினி தோங்குநான் காஞ்சங்கந்
தன்னருமைச் சிறப்பெனைத்துந் தகநாடிச் செந்தமிழின்
முன்னருமைத் திருவாக்கான் முருகாற்றுப் படைமொழிந்த
வன்னவெழிற் கீரன்போ லழகெலா மொருங்கிலக.

௧௬. போற்றுதமிழ்ச் சங்கத்துப் புலவராற் றுப்படையென்
றேற்றதொரு நூலியற்றி யின்னுரையுங் கண்டினிமை
யூற்றிருந்த மற்றதனை யுண்மகிழ்ந்து சங்கத்தார்
வீற்றிருந்த கழகத்தே விடுத்தரங்கேற் றினனம்மா

௧௭. இனையனியா ரெனினுமைத்து மிருங்குடகா விரியலையாந்
தனைநிகருங் கரந்தன்னாற் றமனியஞ்சந் தவிர்முத்தங்
கனைகடலா மிறைக்கென்றுங் கவின்றிறைகொண் டேகலக்கும்
புனைதருசீர்ப் புகழ்மேவு பொன்னிநன்னாட் டினின்மாதோ.

௧௮. பாகூருஞ் சொன்மடவார் பைங்கமுகி னெட்டுசே
லாகார்வி ஞேடாட வம்பொன்செய் மாளிகையின்
மாகாத லோடடிசில் வறியவருக் குகந்தளிக்கு
நாகூருஞ் சிறப்பிற்று நாகூரென் றிடுந்தேத்து.

கசு. அகத்தியந்தொல் காப்பியமே யாதியபல் லிலக்கணமு
மகத்துவமார் வள்ளுவர்நா லடிவயங்குங் கோவையார்
சகத்துரைக்கு மிவைமுதலாந் தகைமைபெறு மிலக்கியமுந்
தகத்தெரிந்த குலாங்காதிர் சதிர்பெறுநன் னாவலனே.

மதுரைத்

## தமிழ்ச் சங்கத்துப்

# புலவராற்றுப்படை.

பரிதிவெயி லெறிக்கும் விரிவுறு வெளிக்கீழ்
விளங்கனி நின்றாங்கு நின்று துளங்கிய
மருணீர் மணியென வுருணீ ரும்ப
ரடர்ந்துமண லாடையிற் படர்ந்தன் றாகலிற்
கருங்கடற் றெனுமிவ் விருங்கண் ஞாலத்துப்
பரத கண்டம் பண்ணிய விரதந்
தனிமையென் பெயர்த்தா யினிமையென் பொருட்டா
யுத்தர மொரீஇத் தக்கணம் போந்தெனக்
கங்கைச் சடைய னொருபாக மங்கையன்
சிமயப் பொதியத் தமர்முனி யகத்தியற்
காய்ந்துதர வுணர்த்திப் போக்கப் போந்த
வோர்ந்துணர் மாந்தர்க் களிக்கு மீர்ந்தமிழ்
முழுதுணர் சிறப்பிற் பழுதுதீர் புலவ
வொன்றுநின் னுள்ளங் குன்றுதக விரியக்
கேளா யத்தை கிளக்குவல் வாளா
மன்னிய வொருநீ யன்ன யானும்
பொருந்துறு புகழி னருந்தமிழ் நசைஇ
மதனுடை முந்துநூ லதன்வழிப் பட்ட
தொல்காப் பியமுதற் பல்காப் பலவென
விலக்கணந் தெரிக்கும் விலக்கினூ றோர்ந்து
பொற்புறு மெழுத்துச் சொற்பொருள் யாப்பு

விழுமிய வகையி னணியிவை பழுநி
யெஞ்சலில் சீர்த்திப் பஞ்சகா வியம்பிற
வெட்டுத் தொகையொடும் பத்துப் பாட்டொடு
மின்பமர் கீழ்க்கணக் கொன்பதிற் றிரட்டியெனச்
சங்க மரீஇய பொங்குநூ றேற்றி
மறையில் கேள்வித் துறைபல் போகிப்
பாவினம் யாத்தற்கு வாய்வளங் கூர்ந்தனன்
கற்றுணர் மாக்க ளருமை யிற்றென
வளந்தறிந் ததனை யுளந்தகத் தெரிந்து
பொன்னு மணியு முன்னூட் சிதறித்
தம்பெயர் விட்டன ரிம்பரின் மாய்ந்த
பாரியுங் காரியு மாயு மோரியும்
பேகனு நள்ளியு மதிகனு மாகி
வரையாது கொடுத்தோர் வாணு ளீதன்
றரையருந் தமிழ ரல்ல ராகலி
னற்றமிழ் மாட்சியுங் கற்றவர் மாட்சியும்
புரிந்துளங் களிப்பத் தெரிந்தாங் கருண
ரில்லென் கவற்சியிற் புல்லென் முகன்கண்
டுடுக்கையு முண்டியு மிருக்கையு முசாஅய்க்
கொடுக்குநர் யாரென் றடுக்குமவர் கரப்பக்
குன்றுவரு நெஞ்சின னின்றன னுழந்தே
கற்றவர் கல்லா மற்றவ ரிவரெனத்
தெற்றெனப் படாஅ வகையிற் றூகிக்
கண்ணின் மாக்கண் முன்ன ரெண்பட
வியன்மணி நிரையிற் செயன்மணி விராஅய்க்
கிடந்திமைத் தாங்கு மடந்திகழ் பவர்மு
னிருவருந் தகைமையி னொருவரெனக் கலாவி
யறியா ரென்னுப் பெருஞ்சுட் டறீஇப்
போலிப் புலமையர் திரியுமிக் காலத்துப்
புனைநூ லுணரா வனைய ரானு
நறவோர் வாழ்க்கைப் பறவையின் விழைஇ
யருங்கலை பலவு மொருங்குடன் றுரீஇ

நன்மையிற் பயிலுந ரின்மை யானும்
பயிலுநர் சிலரே யாகிப் பயில்வுழிப்
புரத்தன் மாலையர் கரத்த லானு
நன்றுறு தமிழ்வளங் குன்றுதக வுணர்ந்து
பண்டையிற் சிறந்தது தழைப்பக் கொண்டு
வானம ரதனை வளர்ப்பல் யானென
வஞ்சிறைத் தும்பி துஞ்சி யூதப்
பிணியவிழ் பலர்ந்து கழல்காம் பணிமலர்
வன்னக் கம்பலம் விரித்தாங் கன்ன
தரைபடர்ந் திமைக்கும் விரைகெழு பூம்பொழி
லிருமருங் கொழுகிய பொருகரை வையைச்
செந்தமிழ் நாட்டுத் திருத்தகு மூதூர்
பைந்தமிழ் வளர்த்த பாண்டிய ரிருக்கை
நடைமாண் புரவியுந் தொடைமான் றேரும்
பணையிரு கோட்டி னிணையெருது பிணித்த
பாண்டிலுஞ் சிவிகையுஞ் சிறுகண் யானையுங்
கூண்டினி தொழுகுங் குறையின் மறுகுதொறுங்
கூடம் போன்ற கோபுர நிரையொடு
மாடஞ் சான்ற மதுரைமா நகர்க்கண்
முந்திய சங்க மூன்றொன் றாகிப்
பிந்திய சங்கம் பிறந்த தாலெனத்
தண்டமிழ் விரிக்கும் பண்டைநூ லெழும்ப
வியனணி விழைகுநர் குழீஇனர் பயில
மால்செய் கல்வியர் மாண்பி னூல்செய
வுரைகாண் வல்லுநர் வரைகாண் டெழுத
முறைபிறழ்ந் துற்ற குறைபல் காண்மார்
முதுநூ றேண்டிப் பழுதாய்ந் தமைக்கக்
குற்றம் போகிய கற்றன கெடாஅப்
பேணாஉ வைகுமோர்ப் பரிக்கை காணாஉச்
சிறப்புப் பெயரொடு பரிசிலு மளிப்பப்
பின்னும் வேண்டுவ வென்னவும் புரிய

மங்கலி லருந்தமிழ்ச் சங்கமொன் றிரீஇனன்
குமரிமருங் குற்ற நிமிர்திரை முரியுஞ்
சேது காவலர் திறற்குடிப் பிறந்தோன்
றீதுதீர் வாழ்க்கைத் தென்புலங் காப்போன்
மறங்கான் பகைவர் வணங்கிய புறங்காண்
மஞ்சுவரு மேற்றி னஞ்சுவரு திறலினன்
புலவர் வம்மின் பொருநர் வம்மின்
பலர்புகழ் கூத்தரும் பாணரும் வம்மின்
போராக் கதவதிப் புரவலன் வாயிலென
வேரார் வான்கொடி நுடங்குபு நுடங்கி
யகவையம் மாடத்து முகவை யூரன்
மேலறி வுயர்ந்த நூலறி புலவன்
முத்தம் விளைவயற் பாலவ னத்த
நாடுசெகிற் கொண்டு பீடுகெழு குடிதழீஇ
முற்றக் காக்குங் கொற்றக் குடையினன்
விரைகமழ் கண்ணியன் பாண்டித் துரையெனக்
கேட்டனெ னன்றே கெட்டதென் கவற்சி
வேட்டன வடைதல் விளிவுறு தாலெனக்
கதுமென வெழூஉச் சினைகொள் புதுமலர்
வண்டுந் தேனு முண்டன களிப்ப
நறவிருந் தளிக்கும் புறவுறழ் சோலை
வளனற வறியா மல்லலம் மூதுநகர்
மாண்புறப் புகூஉக் காண்பன கண்டு
செந்தமிழ் விளங்குமச் சங்கம் போஒய்
நல்லிசைப் புலவர் சொல்லிசை பரப்பக்
கூண்டினி திருக்கு மவைக்களங் குறுகி
யாண்டியான் யாத்த கவியரங் கேற்றி
யுலகுசொல் சிறப்புப் பெயரொடு பெறூஉ
வரிசை யான்ற பரிசிலும் பெறாஉ
வந்தனென் யாஅரெனக் கண்டறிந் தவரே
நீயிருஞ் செல்லிய ராண்டுப் பலபெற
பேயினி ரெனினே யின்னே விட்டிவட்

காலிற் செல்லி னாளிற் செல்லு
முருமுறுமோ டறமொலியி
னிருபுறனு மிருப்புருளை
நான்குருளக் கான்குழூம்
வாஅய்க்கொள்ளிப் பேஎயுயிர்ப்பி
னொலித்துமிழுங் கலித்தூமங்
குழல்வாயிற் சுழல்கொள்ள
மரவட்டைச் செலவொப்பச்
செல்பாண்டில் பல்கோத்த
நெடுந்தொடரி னிரைநீண்டு
கடுங்காலிற் கழிவிசையி
னெந்திர வூர்தி யிவர்ந்தனிர் படர்மி
னந்தமில் காட்சி யணிபல காண்பிர்
வீறிய மாக்க ளேறிறங் கிடன்றொறு
மூறிய வமிழ்தி னுண்டிபல் பெறுகுவிர்
பன்னா ணடந்தனிர் மன்னா தெய்க்குங்
காலுழப் பறியா மாலுறு செலவின்
மலைப்புறு நெடுவழி யொருநா டொலைச்சிச்
சூடிய நறுமலர் வாடிய வுருமு
னிதிமலி கூடலம் பதிவயிற் புகுவி
ராவயிற் போந்து கூரயி லேந்திய
முடியுடை வழுதியர் முறைவழி யிருந்த
கொடிநடங் கெயிலிற் கோயின் மறுகு
மாலய வீதியு மாவண வீதியு
மறிந்தவர் வியக்கு மாண்மையர் மலிந்து
செறிந்தமர் தெருவுந் திருவொடுங் காண்பிர்
கண்டனிர் பின்றைத் திண்டிறற் புலவர்
கூடுறு சங்க நாடினிர் செலினே
யாயிரங் கதிர்கொள் பருதி ஞாயிறு
திருந்துவரைச் சிகர மீமிசை யிருந்தெனக்
கரும்பனைக் கையின் வேழத் தொருவெரி
நுவவு மதிவட்டத் தவவில்குடை நிழற்ற

வருமிறை யிவனெனப் பொருவறு விதியி
னரப்புவகை பிழையா நான்குவகை பரப்பிய
யாழிற் பாண ரேழிற் பாட
விரண்டுபத் தடுக்கி யொன்றுகடை வைத்த
வண்மைய ரொருவடி வண்மின ரெடுத்தென
வான்கவி வாணர் நான்கிற் பாடப்
பொன்முடி கவித்து வென்வே லேந்திப்
பாண்டிநா டளிக்கும் பண்பி னுண்டகை
யிரவலர்க் கடையா வாயிற் புரவலன்
கோதுபதி யொடுக்கும் பாற்கர சேதுபதி
யருளொடு நிலைஇயர் பொருணனி யுதவ
வன்னவன் பெயரொடு மன்னுபெயர் கொண்டு
சங்க மேவுமோ ரங்க மாகி
யூணுடை யேனைய மாணவர்க் கார்த்தி
நல்லா சிரியர் பல்லோர் வைகினர்
தொன்னூ லொருசிறை யொருசிறைப் பின்னூ
லோவிறந் துணர்த்துந் தாவில் கொள்கை
யழகமர் காட்சிக் கழகமுங் காண்பி
ரிலக்கியத் தனவு மிலக்கணத் தனவு
மலக்கண் டீர்க்கு மாகமத் தனவுமென
முதியவு மான்ற முறைமையி னமைந்த
புதியவு மாகிப் பொலிந்துற்று நசைஇ
யோரு மாக்க ளுள்ளந் தேரும்
பாண்டியன் சுவடிச் சாலையுங் காண்பிர்
தென்மொழி யெழுத்தொடு வடமொழி யெழுத்து
மீங்குநனி பாய வாங்கிலாக் கரமுங்
கால்கொள வாக்குபு பால்வேறு படுத்தி
யொன்றுபல வாகிச் சென்றுறப் பதிக்கு
மச்சுச் சாலையு மெச்சக் காண்பிர்
கண்டனிர் சங்க மண்டபம் புகினே
தீந்தமிழ்ப் புணரி மாந்திய மக்களும்

வடமொழி தேர்ந்து திடமுறு பவரு
மாங்கிலம் பயின்ற பாங்கரு மாகிப்
புரையறு நூல்கட் குரைசெய் குநரு
நால்வகை பயக்கு நூல்செய் குநரு
மோரா முதுநூ லாராய் குநருமெனப்
பெரும்புலவர் மருங்கமர
மண்டுடுவில் வெண்டிங்களுந்
தரங்காட்டி யரங்கேறிய
பயில்சிறப்புப் பெயரெய்திய
வறப்பரிசி லுறக்கொள்ளிய
நிலைபயிலுங் கலைபயிலிய
தவமலியு மவர்நடுவட்
கருங்கடலிற் செஞ்ஞாயிறும்
பொரத்தலைமை கொளத்தவிசில்
விரைப்பாண்டித் துரைத்தேவ
னாற்றல்சால் சிறப்பி னுங்கவீற் றிருக்குங்
காட்சி கண்டனிர் களித்தனி ரண்மின்
மாட்சியி னவனே மலர்ந்த முகத்தினன்
யாரை நீயிரென வினவு மோரையிற்
போந்தனென் பெருமநின் னவைக்கள மோர்ந்தெனின்
வருகெனத் தழீஇ யிருக்கென வருகிரீஇப்
போற்றினிர் சென்றநுங் கவியரங் கேற்று
நச்சியாங் கிருக்குந ருளப்பட மெச்சி
வாயரும் புலவன் பெருங்கவி ராயன்
பாவலன் வித்துவா னியறெரி நாவல
னென்றுயர் பெயர்களு ளொன்றுற நமக்குக்
களிவர நல்கி யூர்கோ ளொருதலை
மீனிருந் தென்ன வானிற வயிர
மின்செய் தொளிறும் பொன்செய் யாழியும்
பொலந்தகடு குழித்துப் பொற்புற வமைத்த
வலந்த பொற்றொடரின் மாண்பிற் றாகிப்
பழுதறச் சமைந்த பொழுதறி கருவியு

நொய்ம்மயி ராய்ந்து துய்யென நெய்த
மின்னிவர்ந் தென்ன பொன்னிழை நுழைத்த
மாசுகெடச் சிறந்த காசு மீரமும்
விழுத்தலை யமைந்த கழுத்தள வரையன்
பணயம் பலவு மிணையறத் தரீஇப்
பெருகிய மகிழ்விற் பேணுபு விடுக்கும்
வருகுவிர் மாதோ வளமலி தன்மையிற்
செம்பொன் பழுநிய செழுமரன்
வம்பொடும் பொலிந்து வந்ததா லெனவே.

---

## இதன் பொருள்.

புலவரிடத்து ஆற்றுப்படுத்தலானே இது புலவராற்றுப்படையென வாயிற்று; முருகாற்றுப்படை என்றாற்போல. எனவே, மதுரைத் தமிழ்ச் சங்கப் புலவரிடத்துச்சென்று சிறப்புப்பெயரும் பரிசிலும் பெற்றானொரு புலவன் அவை பெறாதானொரு புலவனுக்குப் பெறுமாறு கூறி, அவனை அவரிடத்து வழிப்படுத்தியதென்பது இதன் பொருள்.

புலவனையாற்றுப்படுத்துக் கூறுமாற்றானே புலவராற்றுப்படையென வாயிற்றென்றாலோவெனின்;— புறப்பொருள் வெண்பாமாலைப் பாடாண் படலத்து "பாடாண்பாட்டே" என்னுஞ்சூத்திரத்தில் "அமரர்கண் முடியு மறுவகை யாகிய, கொடிநிலை கந்தழி வள்ளி குணஞ்சால், புலவரை யவர்வயிற் புகழ்ந்தாற்றுப் படுத்தல், புகழ்ந்தனர் பரவல் பழிச்சினர் பணித, னிகழ்ந்த காமப் பகுதியுட் டோன்றிய, கைக்கிளை வகையும்" என்புழிப் புலவரையவர் வயிற்புகழ்ந்தாற்றுப்படுத்தல் என்பதற்கு "அருங்களவானத் தமரர்வயிற் பெரும்புலவனை யாற்றுப்படுத்தன்று" என்பதாற், கந்தழிவேண்டினானொரு புலவனை அமரரிடத்து ஆற்றுப்படுத்தலே புலவராற்றுப்படையாமாகலின், அது பொருந்தாதென்க. அல்லதூஉம் அது "அமரர்கண் முடியு மறுவகை யானும்" என்னுந் தொல்காப்பியப் புறத்திணையியற்சூத்திரத்துப் போந்த பாடாண்டிணைக்கட் டெய்வப்பகுதியுளடங்கியது. இது "கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியு, மாற்றிடைக் காட்சி யுறழத் தோன்றிப், பெற்ற பெருவளம் பெறாஅர்க் கறிவுறீஇச், சென்றுபய னெதிரச் சொன்ன பக்கமும்" என்னும் மக்கட்பகுதியுளடங்கிய செந்துறைப் பாடாண்பாட்டெனக் கொள்க.

பரிதி வெயில் எறிக்கும் விரிவு உறு வெளி கீழ் விள கனி நின்று ஆங்கு நின்று - ஞாயிறு தன்வெயிலை யெறிக்கின்ற விரிந்த ஆகாயத்தின் கண் விளம்பழமொன்று நின்றாற்போல நின்று,

இக்காட்சி பகற்காலத்துக் காண்டலென்பது போதர வெயிலெறிக்கும் வெளியென்றாம். கீழ்-ஏழாவது. "நிழற்கீழ்" என்றார் பிறரும். இவ்வா தாரமருவாயும், ஆதேயமுருவாயு நின்றன; "ஆகாயத்திற் பருந்து" என் பதுபோல. நின்றாலென்னும் வினையெச்சம் நின்றென நின்றது. மேல் வருவனவுமன்ன.

துளங்கிய - விளங்கின,

மணி என மருள் நீர் உருள் நீர் உம்பர் — நீலமணியென்று மருளுநீர்மை யினையுடைய உருண்ட நீரின்மேலே,

உருணீர் - கடல். நீரினியற்கைவடிவம் உருட்சியாகலின், உருணீரென் றாம். அது படைப்புக்காலத்து ஆகாயத்தின்கண்ணுருண்டு நின்றதாகலின்

மணல் அடர்ந்து ஆடைஇல் படர்ந்தன்று - மணல்கணெருங்கிப் பாலா டையொப்பப் படர்ந்தது இப்பூமி,

படர்ந்தன்றென்னும் வினைமுற்றுப்பெயர் வினைமுதற் பொருட்டு இதனைக் கர்த்தாவான கிருதந்தமென்பர் வடநூலார்.

ஆகலின் - ஆதலால்,

கரும் கடற்று என்னும் இவ் இரும் கண் ஞாலத்து - கரிய கடலினையு டையதென்னும் இந்தப்பெரியவிடத்தினையுடைய பூமியின்கணுள்ள,

கடலானதுருண்டை யென்பதும், அதன்மேற் படர்ந்த மணற்கூட டமே பூமியென்பதும் எம்மோத்து.

பரதகண்டம் பண்ணிய விரதம் - கண்டங்கள் பலவற்றுள்ளும் பரதகண் டம் நோற்றநோன்பு,

தனிமை என் பெயர்த்து ஆய் இனிமை என் பொருட்டு ஆய் - ஒப்பின் மையென்னும்பெயரையுடையதாய் இனிமைஎன்னும்பொருளையுடையதாய்

என்றது தமிழை. அது, தனிமையைக் குறிக்குந் தமியென்னும் வினை யடியாற் பிறந்து, வினைமுதற் பொருண்மையையுணர்த்தும் விகுதி குன்றி இமிழ், உமிழ், கமழ் என்பனபோல ழகரப்பேறு பெற்றுத் தமிழென நின் றதென்பவாகலின், தனிமையென் பெயர்த்தா யென்றும், தமிழென்னு பெயர்க்குப் பொருள் இனிமையென்பவாகலின், இனிமையென் பொருட டாயென்றுமுரைத்தாம். "தமிழ் தழிய சாயலவர்" என்னுஞ் சிந்தாமணி செய்யுளில் தமிழை இனிமையென்றார் நச்சினார்க்கினியரும்.

உத்தரம் ஒரீஇ தக்கணம் போந்து என - வடதிசையை நீங்கித் தென் றிசைக்கு வந்தாற்போல,

கங்கை சடையன் மங்கை ஒரு பாகன் - கங்கையையுடைய சடையை யுடையவனாகிய மங்கையை ஒரு பாகத்தேயுள்ளவன்,

என்றது சிவனை. மங்கை-உமை. சடையனென்னுங் குறிப்பு முற்றுப் பெயரெச்சமாய் நின்றது. ஒருபாக மங்கையனென்றது பொருத்தமில் புணர்ச்சி. "உயர்கொடிச் சேவலோயே" என்றார் பிறரும். இதனை விகுதி பிரித்துக்கூட்டுதலென்பர் **பிரயோக விவேக நூலார்.**

சிமயம் பொதியத்து அமர் முனி அகத்தியற்கு ஆய்ந்து தர உணர்த்தி போக்க - உச்சியையுடைய பொதியமலைக்கண்ணமர்ந்த முனிவனாகிய அகத் தியனுக்கு அதையவனாராய்ந்து உலகத்திற்குத்தரும்படி போதித்துப்போக,

வடமொழியைப் பாணினிக்கு வகுத்துரைத்துத் தென்மொழியைக், குடமுனிக்கு வற்புறுத்தார் கொல்லேற்றுப்பாகர் என்பவாகலி னிங்ஙன முரைத்தாம். "சிறப்பி னாகிய பெயர்நிலைக் கிளவிக்கு, மியற்பெயர்க் கிளவி முற்படக் கிளவார்' ஆகலின் முனியகத்தியனென்றும். இதனை விசேடிய பூர்வபத கருமதாரயனென்பர் **பிரயோகவிவேகநூலார்.** "கடிசொல்லில்லை" என்பதனான், அகத்தியமுனியென விசேடியோத்தர பதமாக்கிக் கூறினு மமையும்.

போந்த - வந்த,

ஓர்ந்து உணர் மாந்தர் களிக்கும் ஈர் தமிழ் முழுது உணர் சிறப்புஇன் பழுதுதீர் புலவ - ஆராய்ந்தறியும் மனிதர்களைக் களிப்பிக்குந் தண்ணிய தமிழ் முழுவதையுமுணர்ந்த சிறப்பினையுடைய குற்றமற்ற புலவனே!

களிப்பிக்குமெனற்பாலது களிக்குமென நின்றது. இதனை அந்தர்ப் பாவிதணிச்சென்பர் வடநூலார்.

நின் உள்ளம் குன்று தகவு இரிய ஒன்று கிளக்குவல் கேளாய் அத்தை- நினதுள்ளங் குன்றுந் தன்மைகெட வொன்று சொல்லுகிறேன் நீ கேட்பா யாக;

அத்தை - முன்னிலையசை.

வாளா மன்னிய ஒரு நீ அன்ன யானும் - வீணே நிலைபெற்ற ஒருவ னாகிய நின்னைப்போல நானும்,

நின்னையன்னவென நிற்றற்பாலது நீயன்னவென நின்றது. இதனைத் திரிந்ததன்றிரிபென்பர். "பாங்கனை யானன்னபண்பனை" என்னுந் திருக்

கோவையாரில் யானன்னவென்பதற்கு என்னையொத்தவெனப் பொருள் கூறினர் நச்சினர்க்கினியரும்.

பொருந்து உறு புகழ் இன் அரும் தமிழ் நசைஇ - மிகப்பொருந்தின புகழினையுடைய அரிய தமிழை நச்சி,

பொருந்தலு முறுதலு மொருபொருளனவாகலின், ஒன்று மிகுதி குறித்துநின்றது.

மதன் உடை முந்து நூல் - அழகினையுடைய முந்தின நூலாகிய அகத்தியத்தையும்,

மதன் - நூலினழகு. அகத்தியத்தின் முந்திய நூலொன்று தமிழ்க்கின்மையின் முந்து நூலென்றும்.

அதன் வழி பட்ட தொல்காப்பியம் முதல் பல என பல்கா இலக்கணம் தெரிக்கும் விலக்கு இல் நூல் தேர்ந்து - அவ்வகத்தியத்து வழிப்பட்ட தொல்காப்பியமுதலாகப் பலவென்னும்படி பல்கி இலக்கணத்தைத் தெரிவிக்கும் விலக்குதலில்லாத ஏனைய நூல்களையுந் தேர்ந்து,

தொல்காப்பியம் வழிநூலாகலின், வழிப்பட்ட வென்றும். பல்கா - பல்கி. தெரிவிக்கு மெனற்பாலது தெரிக்குமென நின்றது; மேலுரைத் தாங்குரைக்க. விலக்கு - முதனிலைத் தொழிற்பெயர். கற்றற்கமையாவிலக்குடை நூல்களை நீக்குதற்கு விலக்கினூலென்றும். நூலென்னுமிரண்டன் கண்ணும் உம்மைதொக்கன.

பொற்பு உறு எழுத்து சொல் பொருள் யாப்பு விழுமிய வகை இன் அணி இவை பழுநி - பொலிவுற்ற எழுத்துஞ் சொல்லும் பொருளும் யாப்பும் சிறப்பினவாகிய வகையினையுடைய அணியுமென்னும் இவ்விலக்கணங்கள் முற்றுப்பெற்று,

எஞ்சல் இல் சீர்த்தி பஞ்சகாவியம் பிற - குறைதலில்லாத மிகுபுகழினையுடைய பஞ்சகாவியங்களும் பிறவும்,

பஞ்சகாவியம்-சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, வளையாபதி, குண்டலகேசி என்பன. பிறவென்பது நீலகேசி, உதயணன்காதை, சூளாமணி முதலியவற்றையுந் தழுவநின்றது. உம்மைதொக்கன.

எட்டு தொகை ஒடு உம் பத்து பாட்டு ஒடு உம் இன்பு அமர் ஒன்பதிற்றிரட்டி கீழ்க்கணக்கு என சங்கம் மரீஇய பொங்குநூல் தேற்றி - எட்டுத்தொகையுடனும் பத்துப்பாட்டுடனும் இன்பமமைந்த பதினெண்கீழ்க்கணக்குமென்று முன்னைய சங்கத்து அடிப்படவிருந்த பொலிகின்ற இலக்கியநூல்களிற்றேறி,

எட்டுத்தொகை - நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப் பத்து, பரிபாடல்,கலித்தொகை, அகநானூறு,புறநானூறு என்பன. பத்துப் பாட்டு - முருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, முல்லைப்பாட்டு, மதுரைக்காஞ்சி, நெடுநல்வாடை, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை, மலைபடுகடாம் என்பன. பதினெண்கீழ்க் கணக்கு - நாலடி, நான்மணிக்கடிகை, இன்னாநாற்பது, இனியவைநாற்பது, கார்நாற்பது, களவழிநாற்பது, ஐந்திணையைம்பது,ஐந்திணையெழுபது, திணை மொழியைம்பது, திணைமாலைநூற்றைம்பது, திணைமாலையெழுபது, குறள், திரிகடுகம், ஆசாரக்கோவை, பழமொழி, சிறுபஞ்சமூலம், முதுமொழிக் காஞ்சி, ஏலாதி என்பன. இக்கூறிய பதினெட்டனுட் சிலவற்றை யொழி த்து வேறுசில சேர்த்துப் பதினெட்டென வொப்பிப்பாரு முளராகலின், இவை தாம் பதினெட்டென்ப தெமக்குடன்பாடன்று. பதினெண்கீழ்க் கணக்குமென்புழி உம்மைதொக்கது. பொங்குநூலென்றமிகையாற் கல்லா டமுதலிய பிறவிலக்கியங்களுங்கொள்ளப்படும். தேற்றுமென்பது தன் வினையாய் நின்றது. “நட்பாடதேற்றாதவர்” என்றாற்போல. இதனைப் பகுதிப்பொருள் விகுதியென்னுஞ் சுவார்த்தத்தில் வந்த காரிதமென்பர் வடநூலார்.

மறை இல் கேள்வி துறை பல் போகி - மறுத்தலில்லாத கேட்டற் றொழிலையுடைய துறைகள் பலவற்றிலும் போய்,

பா இனம் யாத்தற்கு வாய் வளம் கூர்ந்தனன் - பாக்களையு மவற்றினங் களையுங்கட்டுதற்கு வாய்த்த வளமிக்கேனாயினேன் ;

பாவினம் - உம்மைத் தொகை. யாத்தற் கென்னுங் குவ்வுருபு அதற்கு வினையுடைமையில் வந்தது.

கற்று உணர் மாக்கள் அருமை இற்று என அறிந்து - கற்றுணர்ந்த மனி தர்களினருமை இத்தன்மைத்தென்று அளவிட்டறிந்து,

உளம் தக அதனை தெரிந்து - உள்ளந் தகுதிபட அக்கல்வியைத்தெ ரிந்து,

அதனை - நெஞ்சறிசுட்டு.

முன் நாள் பொன் உம் மணி உம் சிதறி - முற்காலத்தே பொன்னையு மிரத்தினங்களையும் பலவாகக் கொடுத்து,

இம்பரில் தம் பெயர் விட்டனர் மாய்ந்த - இவ்வுலகத்தின்கண் தம் பெயர்களை விட்டுவைத்து மறைந்து போன,

விட்டனரென்னும் வினைமுற்று வினையெச்சமாய் நின்றது.

பாரி உம் காரி உம் ஆய் உம் ஓரி உம் பேகன் உம் நள்ளி உம் அதிகன் உம் ஆகி - பாரி காரி ஆய் ஓரி பேகன் நள்ளி அதிகனெனவாய்,

உம்மைகள் எண்ணின்கண் வந்தன.

வரையாது கொடுத்தோர் வாழ் நாள் ஈது அன்று - தமக்கெனவொன்றும் வரைந்துவையாமற் கொடுத்தோராகிய வள்ளன்மார் வாழுங்கால மிஃதன்று,

அரையர் உம் தமிழர் அல்லர் - இக்காலத்தரசருந் தமிழை யுடையாரல்லர்,

ஆகலின் - ஆதலால்,

நல் தமிழ் மாட்சியும் கற்றவர் மாட்சியும் புரிந்து - நல்ல தமிழின் மாட்சிமையையும் அதனைக்கற்றாரின் மாட்சிமையையும் விரும்பி,

உளம் களிப்ப தெரிந்து ஆங்கு அருள்நர் இல் என் கவற்சி இல் - உள்ளங்களிப்பத் தெரிந்துகொடுப்பாரில்லை யென்னுங் கவலையால்,

ஆங்கு - அசை. இல் உருபுமயக்கம்.

புல் என் முகன் கண்டு உடுக்கை உம் உண்டி உம் இருக்கை உம் உசாஅய் கொடுக்குநர் யார் என - புல்லென்ற முகத்தைக்கண்டு உடுக்கு மாடையு முண்ணுமுணவும் இருக்குமிடமுமுளவா வென ஆராய்ந்து கொடுப்பார் யார் ஒருவருமிலரோ யென்று,

"உசாவே சூழ்ச்சி" என்பது தொல்காப்பியம். சூழ்ச்சி - ஆராய்தல் யாரென்னும் வினா எதிர்மறுத்து நின்றது.

அடுக்கும் அவர் காப்ப குன்று வரும் நெஞ்சினன் உழந்து ஏ நின்றனன் - யானடுக்குமவர்கள் என்னைக் கண்டொளித்தலாற் குன்றுதல் வருகின்ற நெஞ்சினையுடையேனாய் வருந்தி நின்றேன்;

நெஞ்சினனென்னுங் குறிப்பு வினைமுற்று வினையெச்சமாய் நின்றது ஏ - அசை.

கற்றவர் கல்லா மற்றவர் இவர் என தெற்று என படாஅ வகையிற்று ஆகி - கற்றவரிவர் கல்லாத மற்றவரிவரென்று தெளிவுபடாத வகையினை யுடையதாய்,

இவரென்பதனைக் கற்றவரினுங்கூட்டுக. வகையிற்றென்னும் வினைக் குறிப்பு இனி வரும் காலத்தென்பதனோடு முடிந்தது. இன்றென்பதனை அசைநிலையாக்கி, வகையாகியெனக் கோடலு மொன்று.

கண் இல் மாக்கள் முன்னர் எண்பட - பார்வையில்லாத மனிதர்முன்னே இரண்டு மொன்றேயென் றெண்ணிக்கைப்பட,

பார்வையைக் கண்ணென்றும்; அஃது ஆகுபெயர். ''கிளந்தவல்ல'' என்பது தொல்காப்பியம். ஈண்டுப் பார்வையென்றது இரத்தின பரிக்கை காண்டலை.

இயல் மணி நிரை இல் செயல் மணி விராஅய் கிடந்து இமைத்து ஆங்கு - இயற்கைரத்தின நிரையிற் செயற்கைரத்தினங் கலந்து கிடந்து பிரகாசித்தாற்போல,

இயன்மணி - சாதிரத்தினம். செயன்மணி - காய்ச்சுகல்.

மடம் திகழ்பவர் முன் இருவரும் தகைமை இன் ஒருவர் என கலாவி - மடமைவிளங்குவோர் முன்னே அக்கற்றூர் கல்லாரென்னும் இருவரும் தகுதிக்கண் ஒருதன்மையரே யென்றுசொல்லும்படி கலந்து,

அறியார் என்ஞ பெரும் சுட்டு உறீஇ - இவர்கள் அறியாதாரென்று சொல்லப்படாமற் பெரிதுஞ் சுட்டப்படுதலைப் பொருந்தி,

போலி புலமையர் திரியும் இக்காலத்து - போலிப்புலவர்கள் திரியாநிற்கு மிந்தக்காலத்தில்,

புனை நூல் உணரா அனையர் ஆன் உம் - அலங்கரிக்கப்பட்ட நூல்களைக் கற்றுணராத அத்தன்மையராலும்,

நறவு ஓர் வாழ்க்கை பறவை இன் விழைஇ அரும் கலை பல உம் ஒருங்கு உடன் துரீஇ நன்மை இல் பயிலுநர் இன்மை ஆன் உம் - தேனைத்தேர்ந்து வாழ்தலையுடைய வண்டுபோல விரும்பி அரிய கலைகள் பலவற்றையு மொருங்கடையத் தேடி நன்மையிலே கற்போரில்லாமையாலும்,

பயிலுநர் சிலர் ஏ ஆகி பயில் உழி புரத்தல் மாலையர் காத்தல் ஆன் உம் - அங்ஙனங் கற்பார் சிலரேயாய்க் கற்குமிடத்துக் கற்பாரைக் காக்குமியல்பினையுடையார் காவாதொழித்தலானும்,

ஏ - பிரிநிலை. பயில்வுழி - வகரம் தோன்றல் விகாரம்.

நன்று உறு தமிழ் வளம் குன்றுதல் கண்டு - நன்மை பொருந்திய தமிழின் வளம் குன்றுதலைக் கண்டு,

அது பண்டை இல் சிறந்து தழைப்ப கொண்டு - அத்தமிழ் பண்டுபோலச் சிறந்து தழைத்தற்காக மனங் கொண்டு,

பண்டை யென்றது சங்கத்தார் காலத்தை.

வான் அமர் அதனை யான் வளர்ப்பல் என - சிறப்புத் தங்குமத்தமிழை யான் வளர்ப்பேனென்று சொல்லி,

அஞ்சிறை தும்பி துஞ்சி ஊத - அகத்தின்கட் சிறகினையுடைய வண்டுகள் தங்கியூதலால்,

பிணி அவிழ்பு அலர்ந்து காம்பு கழல் அணி மலர் - முறுக்கவிழ்ந்து விரிந்து சினையினின்று காம்பு கழன்ற அழகிய பூக்கள்,

வன்னம் கம்பலம் விரித்து ஆங்கு அன்ன தரை படர்ந்து இமைக்கும் விரைகெழு பூபொழில் - சித்திரகம்பலத்தை விரித்தாற்போலத் தரையிற் படர்ந்து விளங்கும் வாசனைமிக்க அழகிய சோலைகள்,

ஆங்கு - அசை.

இரு மருங்கு ஒழுகிய - இரண்டு பக்கத்து மொழுங்குபட வளர்ந்து,

உம்மை தொக்கது.

கரை பொரு வையை செந்தமிழ் நாடு திரு தகு மூது ஊர் - கரையைப் பொருதுகின்ற வையையாற்றினையுடைய பாண்டிநாட்டின்கண்ணுள்ள செல்வந் தக்கிருக்கும் பழையவூர்,

"சந்தனப் பொதியச் செந்தமிழ் முனியுஞ் - சவுந்தர பாண்டியனெனுந் தமிழ் நாடனுஞ், சங்கப் புலவருந் தழைத்தினி திருக்கு, மங்கலப் பாண்டி வளநாடென்ப" என்பவாகலின், செந்தமிழ்நாட்டைப் பாண்டி நாடென்றும்.

பைந்தமிழ் வளர்த்த பாண்டியர் இருக்கை-பசிய தமிழை முற்காலத்து வளரச்செய்த பாண்டியர்களின் குடியிருப்பு,

நடை மாண் புரவி உம் - நடையான் மாட்சிமைப்பட்ட குதிரைகளும்,

மான் தொடை தேர் உம் - குதிரை தொடுத்தலையுடைய தேர்களும்,

பணை இருகோடு இன் இணை எருது பிணித்த பாண்டில் உம் - பருத்த இரு கொம்புகளையுடைய இரட்டை எருதுகளைக் கட்டின வண்டில்களும்,

சிவிகை உம் - பல்லக்குக்களும்,

சிறுகண் யானை உம் - சிறிய கண்களையுடைய யானைகளும்,

கூண்டு இனிது ஒழுகும் குறை இல் மறுகு தொறும் - கூடி இனிதாயொழுங்குபடச் செல்கின்ற குறைபாடில்லாத தெருக்கடோறும்,

கூடம் போன்ற கோபுரம் நிரை ஒடு மாடம் சான்ற மதுரைமா நகர் கண் - மலைச்சிகரத்தைப்போன்ற கோபுரங்களின் வரிசைகளோடே மாடங்களும் மிக்க மதுரை என்னும் பெரியபட்டணத்தின்கண்,

மூதூருங் குடியிருப்புமாகிய மதுரை யென்க.

பிந்திய சங்கம் முந்திய சங்கம் மூன்று ஒன்று ஆகி பிறந்தது ஆல் என- பிந்தினவிச்சங்கம் முந்தின சங்கங்கண் மூன்று மொன்றாய்ப் பிறந்ததென் னும்படி,

மூன்று மென்னு மும்மை தொக்கது. ஆல் - அசை.

தண் தமிழ் தெரிக்கும் பண்டைநூல் எழும்ப - தண்ணிய தமிழைத் தெரிவிக்கின்ற பழைய நூல்களெல்லாந் தலையெடுக்கவும்,

இயல் நனி விழைகுநர் குழீஇனர் பயில - இலக்கணத்தை மிக விரும்பு வோர் சென்று கூடியிருந்து கற்கவும்,

குழீஇன ரென்னும் வினைமுற்று வினையெச்சமாய் நின்றது.

மால் செய் கல்வியர் மாண்பு இன் நூல் செய - பெருமையைச் செய்யுங் கல்வியுடையார் மாட்சிமையினையுடைய பல நூல்களைச் செய்யவும்,

உரை காண் வல்லுநர் வரை காண்டு எழுத - நூல்கட்குரைகாணும் வல் லார் அவ்வந்நூலினளவைக்கண்டு உரை எழுதவும்,

முறை பிறழ்ந்து உற்ற குறை பல் காண்மார் முதுநூல் தேண்டி பழுது ஆய்ந்து அமைக்க - ஒழுங்கு மாறுபட்டுவந்த குற்றம் பலவற்றையுங் காண்பவர் பழையநூல்களைத் தேடிப் பழுதாராய்ந்து திருத்தியமைக்கவும்,

குற்றம் போகிய கற்றன கெடாஅ பேணூஉ வைகுமோர் பரிக்கை காணூஉ - குற்றந்தீரக் கற்றனவற்றைப் பேணிவைத்திருப்போரைப் பரிக்கை கண்டு,

போகிய - வினையெச்சம்.

சிறப்பு பெயர் ஒடு பரிசில் உம் அளிப்ப - சிறப்புப் பெயரினையும் பரிசி னையுமவர்க்குக் கொடுக்கவும்,

பின் உம் வேண்டுவ என்ன உம் புரிய - மறுபடியும் வேண்டுவன எவற் றையுஞ் செய்யவும்,

இவ்வெச்சங்களில் உம்மைதொக்கன.

மங்கல் இல் அரும் தமிழ் சங்கம் ஒன்று இரீஇனன் - மங்குதலில்லாத அரிய தமிழ்ச்சங்கமொன்றை யிருத்தினன்;

நிமிர் திரை முரியும் குமரி மருங்கு உற்ற சேது காவலர் திறல் குடி பிறந்தோன் - நிமிரா நிற்குந் திரைகள் முரிந்து விழுகின்ற கன்னியாகுமரிப் பக்கத்துள்ள சேதுவைக் காத்தற்றொழிலில் வல்லாருடைய திறலான குடி யிற் பிறந்தவனும்,

தீது தீர் வாழ்க்கை தென் புலம் காப்போன் - குற்றந்தீர்ந்த வாழ்க்கை யினையுடைய தெற்கின்கண்ணதாகிய நிலத்தைக் காப்பவனும்,

தென்புலம் - தக்கணம்.

மறம் காண் பகைவர் வணங்கிய - மறத்தைக்கண்ட பகைவர் வணங்க,

வணங்கிய - வினையெச்சம்.

புறம் காண் மஞ்சு வரும் ஏறு இன் அஞ்சு வரு திறலினன் - அப்பகைவரின் முதுகைக்காண்கிற மேகத்தினின்று வருகிற இடியையொத்த காண்பார்க்கச்சம்வருதற்குக் காரணமான திறலையுடையவனும்,

புறங்காண் திறலினனென்க.

புலவர் வம்மின் - புலவீர் வருதிர்,

பொருநர் வம்மின் - பொருநர்காள் வருதிர்,

பலர் புகழ் கூத்தர் உம் பாணர் உம் வம்மின் - பலரும் புகழ்கிற கூத்தரும் பாணருமாகிய நீவிரும் வருதிர்,

இ புரவலன் வாயில் போரா கதவது என - இந்தப் புரத்தல்வல்லானுடைய தலைவாசல் ஒன்றை யொன்று பொருந்தாத கதவினையுடையதென்று,

ஒன்றையொன்று பொருந்ாதவென்றது இரண்டு கதவுகளுஞ் சேராததை; என்றால், அது மூடப்படாத கதவென்பது. தம்மிற் சேர்ந்த கதவென்பதைப் போர்க்கதவென்றார் பட்டினப்பாலையிலும்.

ஏர் ஆர் வான் கொடி நுடங்குபு நுடங்கி அகவு ஐ அம் மாடத்து முகவை ஊரன் - அழகு நிறைந்த சிறந்த கொடிகள் அசைந்தசைந்து கூப்பிடுகின்ற அழகிய மாடங்களையுடைய முகவை யென்னு மூரையுடையவனும்,

அடுக்கு - விரைவுப்பொருட்டு. ஐ - அசை. முகவை - இராமநாதபுரம்.

மேல் அறிவு உயர்ந்த நூல் அறி புலவன் - மேன்மையான அறிவுயர்ந்த நூல்களையறிந்த புலவனும்,

முத்தம் விளை வயல் பாலவனத்தம் நாடு செகில் கொண்டு - முத்து விளைகின்ற வயல்களையுடைய பாலவனத்தமென்னுநாட்டினைத் தோண்மேற் சுமந்து,

பீடு கெழு குடி தழீஇ - அங்குள்ள பெருமை மிக்க குடிகளைத்தழுவி,

முற்ற காக்கும் கொற்றம் குடையினன் - முழுதுங்காக்கின்ற வெற்றிக்குடையினையுடையவனும்,

விரை கமழ் கண்ணியன் பாண்டித்துரை என - மணங்கமழ்கின்ற மாலையினையுடையவனுமாகிய பாண்டித்துரைத்தேவனென்று பலர் சொல்ல,

கண்ணியனென்னுங் குறிப்புமுற்றுப் பெயரெச்சமாய் நின்றது.

கேட்டனென் - நான் கேள்விப்பட்டேன் ;

அன்றே என் கவற்சி கெட்டது - கேட்டவப்பொழுதே என் கவலையொழிந்தது ;

வேட்டன அடைதல் விளிவு உருது ஆல் என - நாம் விரும்பினவற்றையடைதல் கெடுதலுருதென்றெண்ணி,

ஆல் - அசை.

கதுமென எழூஉ - விரைந்தெழுந்து,

சினை கொள் புதுமலர் - கொம்புகள் தம்மிடத்துக்கொண்ட புதிய பூக்கள்,

வண்டும் தேனும் உண்டன களிப்ப - ஆண்வண்டும் பெண்வண்டுமுண்டுகளிப்படைய,

உண்டனவென்னும் வினைமுற்று வினையெச்சமாய் நின்றது.

நற விருந்து அளிக்கும் புறவு உறழ் சோலை - தேனை விருந்தாகக் கொடுக்கின்ற காட்டோடுமாறுபட்ட சோலைகளையுடைய,

நற - குறியதன்கீழாக் குறுகியது.

வளன் அறவு அறியா மல்லல் அ முது நகர் மாண்பு உற புகூஉ - செல்வமறுதலையறியாத வளமுள்ள அந்த மதுரையென்கிற முதிய பட்டணத்தில் மாட்சிமைப்படச் சென்று,

காண்பன கண்டு - அங்கே காணத்தகுவனவற்றைக்கண்டு,

செந்தமிழ் விளங்கும் அ சங்கம் போஒய் - செவ்விய தமிழ் விளங்குகின்ற அந்தச் சங்கத்திற் போய்,

ஈண்டுச் சங்கமென்றது அதன் சாலையை.

நல் இசை புலவர் சொல் இசை பரப்ப கூண்டு இனிது இருக்கும் அவை களம் குறுகி - நல்ல புகழையுடைய அச்சங்கத்துப் புலவர்கள் தஞ் சொல்லையும் புகழையும் யாண்டும் பரத்தற்குக் கூடி இனிதாய் வீற்றிருக்குமவைக்களத்தை நெருங்கி,

ஆண்டு யான் யாத்த கவி அரங்கு ஏற்றி - அங்கே யான் கட்டிக்கொண்டு சென்ற கவியை யரங்கேறச் செய்து,

வருமொழியகரமாகலின், குற்றுகரமிகரமாயிற்று.

உலகு சொல் சிறப்பு பெயர் ஒடு பெருஅ வரிசை ஆன்ற பரிசில் உம் பெறூஉ - உலகம் புகழ்ந்துசொல்லுஞ் சிறப்புப் பெயருடனே வேறொருவரும் பெருத வரிசை சிறந்த பரிசில்களையும் பெற்று,

கண்டு அறிந்தவர் எ யாஅர் என வந்தனென் - முன்னமே யென்னைக் கண்டறிந்துள்ளார் இப்போது கண்டு என் வேறுபாட்டால் இவன்யாரென்று மருளும்படி வந்தேன் ;

எ - அசை ; பிரிநிலையுமாம்.

நீயிர் உம் ஆண்டு செல்லியர் பல பெற மேயினிர் எனின் எ - நீவிரும் அங்கே சென்று சிறப்புப் பெயரும் பரிசிலுமென்னும் பலவற்றையும் பெறுதற்கு விரும்பினீராயின்,

எ - அசை.

இன்னே இவண் விட்டு - இப்போதே இவ்விடம் விடுத்து,

கால் இல் செல்லின் நாள் இல் செல்லும் - காலாலே நடந்து சென்றால் நாளிற் பலகழியுமாதலால்,

காலில் - உருபுமயக்கம்.

உரும் உறமு ஒடு உறழ் ஒலி இன் இருப்பு உருளை நான்கு இரு புறன் உம் உருள் - இடியின் சத்தத்தோடு மாறுபடுகின்ற சத்தத்தையுடைய இரும்புருளைகளுன்கு இரண்டு பக்கத்து முருளவும்,

உறமு - முதனிலைத் தொழிற்பெயர்.

கான் குழுமும் கொள்ளி வாஅய் பேஎய் உயிர்ப்பு இன் ஒலித்து உமிழும் கலி தூமம் குழல் வாய் இல் சுழல் கொள்ள - வனத்திற் கூடின கொள்ளி வாய்ப் பேயின் மூச்சையொப்பவொலித்து எந்திரங்கக்குகின்ற மிக்க புகை குழலின்வாயிற் சுழலுதலைக்கொள்ளவும்,

மரவட்டை செலவு ஒப்ப செல் பாண்டில் - மரவட்டையினது நடையைப்போலச் செல்கின்ற வண்டில்கள்,

இஃது உருவுவமம்.

பல் கோத்த நெடும் தொடர் இன் - பலவற்றைக் கோத்த நெடிய தொடரினையுடைய,

நிரை நீண்டு கடும் கால் இன் கழி விசை இன் - நிரையாய் நீண்டு கடிய காற்றைப்போலவோடுகின்ற வேகத்தையுடைய,

எந்திர ஊர்தி இவர்ந்தனிர் படர்மின் - எந்திரவூர்தியிலே யேறிச்சென்மின் ;

எந்திரவூர்தி - புகைவண்டில். இவர்ந்தனிரென்னும் வினைமுற்று வினையெச்சமாய் நின்றது.

அந்தம் இல் காட்சி அணி பல காண்பிர் - அங்ஙனஞ் சென்றால் முடிவில்லாத காட்சியான அலங்காரங்கள் பலவற்றைக் காண்பீர் ;

வீறிய மாக்கள் ஏறு இறங்கு இடன்தொறும் அமிழ்து இன் ஊறிய உண்டி பல் பெறுகுவிர் - பெருமையுற்ற மனிதர்கள் ஏறுதலிறங்குதலையுடைய இடங்கடோறும் அமிழ்தையொப்பச் சுவையேறின உண்டிகள் பலவற்றையும் பெறுவீர் ;

ஏறு இறங்கு - முதனிலைத் தொழிற்பெயர்கள்.

மன்னுது பல் நாள் நடந்தனிர் எய்க்கும் கால் உழப்பு அறியா மால் உறு செலவு இன் - தரிபட்டிராமற் பலநாட்களாக நடந்திளைக்குங் கால் வருத்தத்தை யறியாமற் பெருமை பொருந்தின போக்கினையுடையதாக,

மலைப்பு உறு நெடு வழி ஒரு நாள் தொலைச்சி - மலைப்புத் தங்கின நீண்ட வழியை ஒரே நாளிற் போக்கி,

சூடிய நறுமலர் வாடு இயல் உரு முன் - நீவிர் சூடின நறியபூ வாடுமியற்கையைப் பொருந்தா முன்னமே,

நிதி மலி கூடல் அம் பதி வயின் புகுவிர் - நிதிமலிகின்ற கூடலென்னுமழகிய மதுரைப்பதியினிடத்துப் புகுவீர் ;

ஆ வயின் போந்து - அந்தவிடத்திற் போய்,

கூர் அயில் ஏந்திய முடி உடை வழுதியர் முறை வழி இருந்த கொடி நுடங்கு எயில் இன் கோயில் மறுகு உம் - கூரிய அயிற்படையைக் கையிலேந்தின முடியையுடைய பாண்டியர்கள் செங்கோன்முறைவழியே அரசாண்டிருந்த கொடிகளசைகின்ற அரணையுடைய அரமனைவீதியையும்,

ஆலயம் வீதி உம் - தேவாலய வீதிகளையும்,

ஆவணம் வீதி உம் - கடைவீதிகளையும்,

அறிந்தவர் வியக்கும் ஆண்மையர் மலிந்து செறிந்து அமர் தெருவும் - பலதொழில்களையும் அறிந்தோர் வியக்கின்ற ஆண்மையினையுடையார் மிகுத்துச்செறிந்து தங்கின பலவேறு வகைப்பட்ட வீதிகளையும்,

திரு ஒடு உம் காண்பிர் - செல்வத்தோடே காண்பீர்;

உம் - அசை.

கண்டனிர் பின்றை - கண்ட பின்னர்,

கண்டனிரென்னும் வினைமுற்றுப் பெயரெச்சமாய் நின்றது.

திண் திறல் புலவர் கூடு உறு சங்கம் நாடினிர் செலின் ஏ - திண்ணிய திறலையுடைய புலவர்கள் கூடுதலுற்ற சங்கத்தை நாடிச் சென்றால்,

கூடு - முதனிலைத்தொழிற்பெயர்.

ஆயிரம் கதிர் கொள் பருதி ஞாயிறு ந்து என - ஆயிரங்கதிர்களைக் கொண்ட மலைச்சிகரத்தின்மேலே இருந்தாற்போல,

மீமிசை - ஒருபொருளிருசொல்.

கரும் பனை கை இன் வேழத்து ஒரு வெரிந் - ற கைகளையுடைய யானையின் ஒப்பற்ற முதுகில்,

அரசயானையாகலின் ஒப்பற்ற முதுகென்றும்.

உவவு மதி வட்டம் தவவு இல் குடை நிழற்ற - உவாமதிபோல வட்டமாகிய கெடுதலில்லாத குடை நிழலைச்செய்ய,

வரும் இறை இவன் என - உலா வருகின்ற அரசனிவனென்று,

பொருவு அறு விதி இல் நரம்பு வகை பிழையா பரப்பிய நான்கு வகை யாழ் இன் பாணர் எழ் இல் பாட - ஒப்பில்லையான விதியானே நரம்புவகை பிழைபடாமற் பரத்திக்கட்டின நான்கு வகையான யாழினையுடைய பாணர் எழிசையிற்பாடவும்,

நரம்புவகை - இருபத்தொன்றும், பத்தொன்பதும், பதினாறும், எழும். நான்குவகையாழ் - பேரி, மகரம், சகோடம், செங்கோடு. எழிசை - குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரமென்பன. எழென்னும் வரையறைப் பண்புப்பெயர் அப்பண்பினையுடைய இசைக்காயிற்று.

இரண்டு பத்து அடுக்கி ஒன்று கடை வைத்த வண்மையர் ஒரு வடிவு எடுத்து அண்மினர் என - இரண்டுபத்தைச் சேரவைத்து ஒன்றை அதன் கடையினிறுத்தின எண்ணையுடைய வள்ளன்மையரனைவரும் ஒரேவடிவெடுத்து வந்தாரென்று,

என்றது இருபத்தொரு வள்ளல்களை.

வான் கவி வாணர் நான்கு இல் பாட - சிறந்த கவிவாணர்கள் நான்கு கவியாற்பாடவும்,

நான்குகவி - ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம். இல்-உருபு மயக்கம். நான்கென்னும் வரையறைப் பண்புப்பெயரும் அவ்வாறே கவிக்காயிற்று.

பொன் முடி கவித்து - பொன்னாலான முடியைச் சிரசிலணிந்து,

வென் வேல் எந்தி - வெற்றியையுடையவேற்படையைக் கையிலேந்தி,

பாண்டி நாடு அளிக்கும் பண்பு இன் ஆண் தகை - பாண்டி நாட்டினைக் காக்கின்ற பண்பினையுடைய ஆண்டகை,

வலன்- இரத்தற்செழுழில் வல்லார்க்கு
புரத்தற்செழுழிலில் வல்லவன்,

கர சேதுபதி - குற்றமுள்ள அரசர்களை
என்னுமரசன்,

மாகிய சேதுபதி யென்க.

பொருள் நனி உதவ - தன்னருளோடே நிலைபெ
றுவதா மிகவுமுதவுதலால்,

அன்னவன் பெயர் ஒடு மன்னு பெயர் கொண்டு - அவ்வரசன் பெய
ரோடே தரிபட்ட பெயரைக்கொண்டு,

அன்னவன் பெயரொன்றது அவ்வரசனின் குலப்பெயரை. அது, சேதுபதி யென்பதாம். எனவே, "சேதுபதி செந்தமிழ்க்கலாசாலை" என்னும் பெயரைக்கொண்டென்றபடி.

சங்கம் மேவும் ஓர் அங்கம் ஆகி - அச்சங்கத்தைப் பொருந்தின ஓரவயவமாய்,

ஊண் உடை ஏனைய மாணவர்க்கு ஆர்த்தி - ஊணையு முடையையும் மற்றவைகளையும் மாணக்கர்களுக்குக் கொடுத்து,

ஏனைய - இருக்கை, முழுக்கெண்ணெய் போல்வன.

நல் ஆசிரியர் பல்லோர் வைகினர் - நல்லாசிரியர் பலரிருந்து,

நல்லாசிரியர் - "குலனரு டெய்வங் கொள்கை மேன்மை. கலைபயி றெளிவு கட்டுரை வன்மை, நிலமலை நிறைகோன் மலர்நிகர் மாட்சியு, முலகிய லறிவோ டுயர்குண மினையவு, மமைபவ னூலுரை யாசிரி யன்னே" என்னுமியல்பினையுடையார். வைகினரொன்னும் வினைமுற்று வினையெச்சமாய் நின்றது.

தொல் நூல் ஒரு சிறை பின் நூல் ஒரு சிறை - பழைய நூல்களொரு பக்கமும் பிந்தின நூல்களொருபக்கமுமாக,

ஓவு இறந்து உணர்த்தும் தா இல் கொள்கை - ஒழிவின்றிக் கற்பிக்கின்ற வருத்தமில்லாத கொள்கையினையுடைய,

அழகு அமர் காட்சி கழகம் உம் காண்பிர் - அழகு தங்கின காட்சியினையுடைய கழகத்தையுங் காண்பீர்;

இலக்கியத்தன உம் இலக்கணத்தன உம் அலக்கண் தீர்க்கும் ஆகமத்தன உம் என - இலக்கியத்தையுடையனவும் இலக்கணத்தையுடையனவும் துன்பத்தைத்தீர்க்கின்ற ஆகமங்களையுடையனவுமென்று,

முதிய உம் ஆன்ற முறைமை இன் அமைந்த புதிய உம் ஆகி பொலிந்து - முதியவைகளும் சிறந்த முறைமையோடேயமைந்த புதியவைகளுமாய்ப் பொலிவுற்று,

நசைஇ உற்று - விரும்பிப்போய்,

ஒரும் மாக்கள் உள்ளம் தேரும் - ஓர்ந்துணரும் மனிதர்களின் மனங்கள் தேர்தற்குக் காரணமான,

உள்ளந் தேருமென்பது காரணங் குறித்துநின்றது; 'நோய்தீருமருந்து' என்றாற்போல. பொலிந்து தேருஞ்சாலை யென்க.

பாண்டியன் சுவடி சாலை உம் காண்பிர் - பாண்டியன் பெயரானே நிறுவிய புத்தகசாலையையுங் காண்பீர்;

அது "பாண்டியன் புத்தகசாலை" யாம். புத்தகசாலை யென்னுது சுவடிச்சாலை யென்றது, எட்டுப் பிரதிகளையுந் தழுவுதற்கென்க.

தென்மொழி எழுத்து ஒடு வடமொழி எழுத்து உம் ஈங்கு நனி பாய ஆங்கில அக்கரம் உம் - தமிழெழுத்துக்களுடன் சம்ஸ்கிருதவெழுத்துக்களையும் இங்கே மிகப் பரவிய ஆங்கில வெழுத்துக்களையும்,

தென்மொழி பலவற்றுள்ளுஞ் சிறப்புடைத்துத் தமிழேயாகலின் அதனைத் தென்மொழியென்றும், வடமொழிகளுள் சம்ஸ்கிருதமற்றேயாகலின் அதனை வடமொழி யென்று முரைத்தாம். ஆங்கிலாக்கரம் - வடசொன் முடிபு.

கால் கொள வாக்குபு - காலைத் தமக்காதாரமாகக் கொள்ளும்படி வார்த்து,

காலென்றது அச்செழுத்தின் கீழ்க்கட்டையை.

பால்வேறு படுத்தி - பகுதி வேறுகச்செய்து,

ஒன்று பல ஆகி சென்று உற பதிக்கும் அச்சு சாலை உம் மெச்ச காண்பிர் - ஒருபிரதி பலபிரதிகளா யெங்குஞ்சென்று பொருந்தப் பதிப்பிக்கும் அச்சுக்கூடத்தையும் நீவிரே மெச்சிக்கொள்ளும்படி காண்பீர்;

முன் கலாசாலைபோலப் புத்தகசாலையும் அச்சுச்சாலையும் சங்கத்தினங்கமெனக்கொள்க.

கண்டனிர் - இவற்றைக்கண்டு,

கண்டனிரென்னும் வினைமுற்று வினையெச்சமாய் நின்றது.

சங்கம் மண்டபம் புகின் எ - சங்கத்து மண்டபத்தின்கட் புகுவீராயின்,

எ - அசை.

தீ தமிழ் புணரி மாந்திய மக்கள் உம் - இனிய தமிழ்க் கடலைக் குடித்த மனிதர்களும்,

என்றது தமிழ்ப்புலவர்களை.

வடமொழி தேர்ந்து திடம் உறுபவர் உம் - சமஸ்கிருதத்திற் றேர்ந்து திடங்கொண்டவர்களும்,

என்றது சமஸ்கிருதபண்டிதர்களை.

ஆங்கிலம் பயின்ற பாங்கர் உம் ஆகி - ஆங்கிலபாடையைக் கற்ற பாங்கினையுடையவருமாய்,

என்றது பீ. ஏ., எம். ஏ., க்களை.

புரை அறு நூல்கட்கு உரை செய்குநர் உம் - குற்றமற்ற நூல்களுக்கு உரை செய்வாரும்,

நால் வகை பயக்கும் நூல் செய்குநர் உம் - நான்குவகைப் பயனையும் பயக்கின்ற நூல்களைச்செய்வாரும்,

நால்வகைப் பயன் - அறம், பொருள், இன்பம், வீடு.

முது நூல் ஓரா ஆராய்குநர் உம் என - முதிய நூல்களையோர்ந்து பழுதாராய்வாருமென்று,

பெரும்புலவர் மருங்கு அமர - பேரறிவினையுடையார் இருமருங்குமமர்தலால்,

மண்டு உடு இல் வெண் திங்கள் உம் - நெருங்கின விண்மீன்கணடுவில் வெள்ளிய திங்களும்,

தரம் காட்டி அரங்கு ஏறிய - தத்தந் தரத்தைக்காட்டி அரங்கத்தின்கணேறவும்,

பயில் சிறப்பு பெயர் எய்திய - பயில்கின்ற சிறப்புப் பெயரைப் பெறவும்,

அற பரிசில் உற கொள்ளிய - தருமமான பரிசிலைப் பொருந்தும்படி பெற்றுக்கொள்ளவும்,

நிலை பயிலும் கலை பயிலிய - நிலைமையுடன் பயில்கிற பஃகலைகளைக் கற்கவும்,

இவை நான்கும் உம்மை தொக்க வினையெச்சங்கள்.

தவ மலியும் அவர் நடுவண் - மிக மலிந்திருக்குமவர்கணடுவில்,

கரும் கடல் இல் செஞ்ஞாயிறு உம் பொர - கரிய கடலின்கட் செவந்த ஞாயிறும் போல,

விரை பாண்டித்துரைத்தேவன் தவிசில் தலைமை கொள - வாசனையுள்ள பாண்டித்துரைத்தேவன் ஆசனத்தில் தலைமைத் தன்மையைக் கொள்ளும்படி,

ஆற்றல் சால் சிறப்பு இன் ஆங்க வீற்று இருக்கும் காட்சி கண்டனிர் - வலிமைமிக்க சிறப்போடே வீற்றிருக்குங்காட்சியை நீவிர் கண்டு,

ஆங்க - அசை. கண்டனிரென்னும் வினைமுற்று வினையெச்சமாய் நின்றது.

களித்தனிர் அண்மின் - களிப்புற்று நெருங்கினல்,

களித்தனிரென்னும் வினைமுற்று வினையெச்சமாய் நின்றது.

மாட்சி இன் அவன் ஏ - மாட்சிமையையுடைய அந்தப் பாண்டித்துரைத் தேவன்,

ஏ - அசை.

மலர்ந்த முகத்தினன் - களிப்பான் மலர்ந்த முகத்தினையுடையவனாய்,

முகத்தினனென்னுங் குறிப்புமுற்றுப் பெயரெச்சமாய் நின்றது.

நீயிர் யார் ஐ என வினவும் - நீவிர் யாரென்று நும்மைக் கேட்பன் ;

ஐ - அசை.

பெரும நின் அவை களம் ஓர்ந்து ஒரை இல் போந்தனென் எனின் - பெருமானே! நினதவைக்களத்தைக் கருதி நல்ல வேளையில் வந்தேனென்று நீவிர் கூறுவீராயின்,

வருக என தழீஇ இருக்க என அருகு இரீஇ - வருவீராக வென்று தழுவி இருப்பீராக வென்று தன் பக்கத்தேயிருத்தி,

போற்றினிர் சென்ற நும் கவி அரங்கு ஏற்று - நீவிர் பேணிக்கொண்டு சென்ற நுங்கவியை அரங்கத்தே ஏற்றுக்கொண்டு,

ஆங்கு இருக்குநர் உளப்பட நச்சி மெச்சி - அங்கேயிருக்கு மச்சங்கப் புலவரெல்லாருமுள்படட நும்மை விரும்பி மெச்சி,

வாய் அரும் புலவன் பெரும் கவிராயன் பாவலன் வித்துவான் இயல் தெரி நாவலன் என்று உயர் பெயர்கள் உள் ஒன்று - வாயாலரிய புலவனும் பெரிய கவிராயனும் பாவலனும் இலக்கணந் தெரிந்த நாவலனுமென்றுயர்ந்த சிறப்புப்பெயர்களு ளொருபெயரை,

நமக்கு உற களி வர நல்கி - நமக்குப் பொருந்தும்படி களிப்புண்டாகக் கொடுத்து,

ஊர்கோள் ஒருதலை மீன் இருந்து என்ன - ஊர்கோள்வட்டத்திஞெரிடத்து விண்மீனென்றிருந்தாற்போல,

வால் நிறம் வயிரம் மின் செய்து ஒளிறும் பொன் செய் ஆழி உம் - வெள்ளிய வொளியையுடைய வயிரக்கல்லிருந்து மின்னைச்செய்து விளங்கும் பொன்ஞற்செய்த மோதிரத்தையும்,

பொலம் தகடு குழித்து - பொன்ஞலான தகட்டைக் குழியச்செய்து,

பொற்பு உற அமைத்த - அதிலே பொலிவுறவமைக்கப்பட்ட,

வலந்த பொன் தொடர் இன் மாண்பிற்று ஆகி பழுது அற சமைந்த - கட்டின பொற்சங்கிலியையுடைய மாட்சிமையையுடையதாய்ப் பழுதில்லையாம்படி சமைந்த,

பொழுது அறி கருவி உம் - வேளையையறிதற்குக் காரணமான கருவியையும்,

என்றது கடிகாரத்தை.

நொய் மயிர் துய் என ஆய்ந்து நெய்த - நுண்ணிய மயிரைப் பஞ்சுநுனிபோலவாய்ந்து அதனைநெய்யப்பட்ட,

மின் இவர்ந்து அன்ன பொன் இழை நுழைத்த - மின்னுக்கொடி படர்ந்தாற்போலப் பொன்ஞலாகிய நூலை யூடேநுழைத்த,

மாசு கெட சிறந்த காசுமீரம் உம் - குற்றமறச் சிறந்த காசுமீரமாகிய போர்வையையும்,

காசுமீரம் - ஆகுபெயர்; இது, பிறந்தவழிக் கூறல்.

அரையன் விழு தலை கழுத்து அளவு அமைந்த பணயம் பல உம் - நம்மரசனது சிறந்த தலையுரு கழுத்துவரையமைந்த பணம் பலவற்றையும்,

இணை அற தரீஇ - இணையில்லையாம்படி தந்து,

பெருகிய மகிழ்வு இல் பேணுபு விடுக்கும் - பெருகிய மகிழ்ச்சியோடே நம்மைப் பேணி அநுப்புவன்;

இல் - உருபுமயக்கம்.

வளம் மலி தன்மை இல் - இச்செல்வம் நமக்கு மிக்கதன்மையானே,

இல் - உருபு மயக்கம்.

செம்பொன் பழுநிய செழும் மரன் - செவந்த பொன்னானே முற்றுப் பெற்ற செழுமையானவொருமரம்,

வம்பு ஒடு உம் பொலிந்து வந்தது ஆல் என ஏ வருகுவிர் மாது ஓ - வாசனையோடு பொலிவுபெற்று வந்ததுபோல வருகுவீர் என்றவாறு.

உம், ஆல், ஏ, மாது, ஓ - அசைகள். இப்பாட்டின்கண் எச்சங்களும் முற்றுக்களும் ஆண்டாண்டுத் தெள்ளிதிற் கிடந்து வினைமுடித்தலின், யாமீண்டவற்றைத் திரட்டிக் காட்டிலம். "அகன்றுபொருள் கிடப்பினு மணுகிய நிலையினு, மியன்றுபொருண் முடியத் தந்தன ருணர்த்தன், மாட்டென மொழிப பாட்டியல் வழக்கின்" என்பவாகலின், மாட்டுறுப்புச்சில வாண்டாண்டுள. இதன்கண் ஒருமை பன்மைமயக்கம் ஆற்றுப்படை மருங்கிற் போற்றியது. இதனுட் சில வஞ்சியடிகளும் வந்தன. "இயற்சீர் வெள்ளடி—" என்னுந் தொல்காப்பியச்செய்யுளியற் சூத்திரவுரையில் உரையாசிரியர் நச்சினார்க்கினியர் உம்மையாற் பிறவடியையுந் தழீஇ "பாஅல்புளிப்பினும் பகலிருளினும்" என்னும் வஞ்சியடியை யெடுத்தோதினர். "இயற்சீர் வெள்ளடி வஞ்சி யடியிவை, யகப்பட வரூஉ மகவலு முளவே" என்பது யாப்பருங்கலம். அல்லதூஉம், ஆசிரியத்து விகற்பமே வஞ்சியாகலானுமது சாலுமென்க. பொருநராற்றுப்படைக்கண் வஞ்சியடிகண் மிக்குவந்தமையான், "ஆசிரிய நடைத்தே வஞ்சி" என்பதனாற் பின்னர் வஞ்சி மிகவும் வந்தனவென்றுணர்க வென்பர் நச்சினார்க்கினியர்.

"குற்றங் களைந்து குறைபெய்து வாசித்தல், கற்றறிந்த மாந்தர் கடன்" ஆகலின், யாமிறைப்பயிற்சியானே செய்தவிப்பாட்டினிடத்தும், விரிவஞ்சி யொருவாறு சுருக்கி முடித்த இவ்வுரையினிடத்துங் காணப்படுங் குற்றங் களைக் களைந்துகோடல் கற்றார்க்குக்கடனேயாம்.

மதுரைத் தமிழ்ச் சங்கத்துப்

## புலவராற்றுப்படை மூலமும் உரையும்

முற்றின.

# பிழைதிருத்தம்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| க0 | கரு | போக, | போகட, |
| கரு | ௯0 | இன்றென்பதனை | இற்றென்பதனை |
| கரு | சூ | வளர்ந்து | வளர்ந்த |
| கசா | உஉ. | பரிசினையு | பரிசிலையு |
| உஉ | கசூ | மேன்மை. | மேன்மை, |
| உரு | கசா | பெயரெச்சமாய் | வினையெச்சமாய் |